பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

17 10 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 121 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

2. குஜராத் மாநிலத்தில் முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேல் தவிர ஒட்டுமொத்த அமைச்சரவையும் ராஜினாமா செய்துள்ளது.

3. பாதுகாப்புத்துறையில் தன்னிறைவு என்பது வெறும் இலக்கு மட்டுமல்ல, நாட்டின் பாதுகாப்பிற்கான வலிமையும் அதில் அடங்கியுள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4. மத்திய ஆசிய நாடுகளில் தீவிரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க இந்நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. ப்ரோ கபடி லீக் போட்டியில் தமிழக அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 121 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

பிஹார் சட்டப்பேரவைத் தொகுதியில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

இதையடுத்து நேற்று பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் ராஷ்ட்ரிய ஜனதாதளம் தலைமையிலான மகா கூட்டணி வேட்பாளர்கள் ஏராளமானோர் நேற்று மனு தாக்கல் செய்தனர்.

பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சரும், அக்கட்சியின் மூத்த தலைவருமான திரு. யோகி ஆதித்யநாத், சத்தீஸ்கட் முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய், மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் ஆகியோர் நேற்று பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிஹார் துணை முதலமைச்சருமான திரு. சாம்ராட் சௌத்ரி, தாராப்பூர் தொகுதியில் மனுதாக்கல் செய்துள்ளார்.

சாலைக் கட்டுமானத் துறை அமைச்சர் திரு. நிதின் நபின் பட்னா மாவட்டத்தில் உள்ள பங்கிபூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஷ்ரவண்குமார் ஐக்கிய ஜனதாதள கட்சியின் சார்பில் நாளந்தா தொகுதியில் போட்டியிட மனுதாக்கல் செய்துள்ளார்.

சட்டப்பேரவை முன்னாள் தலைவரும், ராஷ்ட்ரிய ஜனதாதள வேட்பாளருமான திரு. அவாத் பிஹாரி சௌத்ரி, சிவான் தொகுதியில் மனுதாக்கல் செய்துள்ளார்.

மறைந்த முன்னாள் மக்களவை உறுப்பினர் முகமது சஹாபுதீன் மகன் திரு. ஒசாமா சாஹேப் ரகுநாத்புர் தொகுதியில் ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

இதற்கிடையே பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள லோக்ஜனசக்தி கட்சியின் ராம்விலாஸ் பிரிவு இரண்டாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதையடுத்து இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள பிஜேபி, ஐக்கிய ஜனதாதளம், இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா, ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா, லோக் ஜன்சக்தி ராம்விலாஸ் பஸ்வான் பிரிவு ஆகிய கட்சிகள் மொத்தமுள்ள 243 தொகுதிகளுக்கான வேட்பாளர்களையும் அறிவித்துள்ளன.

இந்நிலையில் பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள காங்கிரஸ் வேட்பாளர்களின் முதலாவது பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 48 பேர் இடம்பெற்றுள்ளனர்.

முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் போட்டியிடும் 24 வேட்பாளர்களும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் போட்டியிட உள்ள 24 வேட்பாளர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

பிஹார் காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ராஜேஷ் ராம் Kutumba தொகுதியில் போட்டியிடுகிறார்.

மூத்த தலைவர் திரு. ஷகில் அகமது கான் Kadaw தொகுதியிலும், Amita Bhushan பெகுசராய் சட்டப்பேரவை தொகுதியிலும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு இறுதிப்படுத்தி அறிவித்துள்ளது.

<<<<>>>>

குஜராத் மாநிலத்தில் முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேல் தவிர ஒட்டுமொத்த அமைச்சரவையும் ராஜினாமா செய்துள்ளது.

அமைச்சரவையை மாற்றியமைக்க வசதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதாக பிஜேபி வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய அமைச்சர்கள் அடங்கிய பட்டியலை முதலமைச்சர் இன்று மாநில ஆளுநர் திரு. ஆச்சார்யா தேவ்ரத்திடம் வழங்க உள்ளார்.

புதிய அமைச்சர்கள் இன்று மாலை பதவியேற்க உள்ளனர்.

முன்னதாக நேற்று முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேல் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவையை மாற்றியமைப்பது தொடர்பான தகவலை முதலமைச்சர், சக அமைச்சர்களுக்கு தெரிவித்தார்.

இந்நிலையில், பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் காந்திநகருக்கு வருகை தந்துள்ளனர்.

இன்று நடைபெற உள்ள அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் அவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறையில் தன்னிறைவு என்பது வெறும் இலக்கு மட்டுமல்ல, தேசிய பாதுகாப்பிற்கான வலிமையும் அதில் அடங்கியுள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புனேயில் உள்ள ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை நேற்று அமைச்சர் தலைமையிலான பாதுகாப்பு அமைச்சகத்திற்கான ஆலோசனைக் குழு பார்வையிட்டது.

பின்னர் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களும், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமும் என்ற தலைப்பில் அங்கு நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உலகில் வேகமாக மாறிவரும் தொழில்நுட்பத்தை அறிந்து பாதுகாப்புத் துறையிலும் மாற்றங்களைப் புகுத்துவது அவசியம் என்று கூறினார்.

பாதுகாப்புத்துறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்களாக மட்டும் நமது நாடு இருக்கக் கூடாது படைப்பாளர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொதுத்துறை நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் இணைந்து பாதுகாப்புத்துறை தொடர்பான கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நமது இளைஞர்கள் செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு, ரோபோ தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் உலக நாடுகளுடன் போட்டி போடும் அளவிற்கு முன்னேறியுள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய ஆசிய நாடுகளில் தீவிரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க இந்நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிர்கிஸ்தான் நாட்டின் பிஷ்கெக்கில் நேற்று நடைபெற்ற இந்நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியாவின் சார்பில் இந்தக் கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கலந்துகொண்டார்.

நாட்டின் பாதுகாப்பில் எழுந்துள்ள சவால்கள் குறித்தும் பிரதிநிதிகளுக்கிடையே விவாதம் நடைபெற்றது.

ஆஃப்கனிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை வலியுறுத்திய பிரதிநிதிகள், அந்நாட்டின் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு உதவ ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்தியாவிற்கும், மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையே அதிகமான தொடர்புக்கும் முன்னுரிமை அளிக்க இந்தக் கூட்டத்தின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது.

டிஜிட்டல் இணைப்பு, உட்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு, விண்வெளி மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை விரிவாக்கவும் மத்திய ஆசிய நாடுகள் முடிவு செய்துள்ளன.

17 10 25 7 15 Kirkisthan - Meeting-2

வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவில் பணிபுரிய வருகை தரும் அதிக தொழில் திறன் மிக்க ஊழியர்களுக்கான H1B விசா கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதை எதிர்த்து அமெரிக்க நீதிமன்றத்தில் அமெரிக்க வர்த்தக சபை வழக்கு தாக்கல் செய்துள்ளது.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-பின் உத்தரவால் ஊழியர்களுக்கு நிறுவனம் செய்யும் செலவு அதிகரிக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது H1B விசாவுக்காக நிறுவனங்கள் தங்களது ஊழியர்களுக்கு 2 ஆயிரம் முதல் 5 ஆயிரம் டாலர் வரை கட்டணமாக செலுத்துகின்றனர்.

இதனை ஒரு லட்சம் டாலராக உயர்த்தி அதிபர் திரு. ட்ரம்ப் உத்தரவிட்டதை நிறுவனங்கள் மட்டுமல்ல தொழிங்சங்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

17 10 25 7 15 Kirkisthan - Meeting-2

சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டிருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

வரி குறைப்பால் டிராக்டர் மற்றும் வேளாண் உற்பத்தி கருவிகள் விலை குறைந்துள்ளதாக திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

(Voice Byte - Farmer - 34 Sec)

17 10 25 7 15 Kirkisthan - Meeting-2

ப்ரோ கபடி லீக் போட்டியில் தமிழக அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி தில்லியில் இன்றிரவு மணி 8.30க்கு நடைபெற உள்ளது.

மற்றொரு போட்டியில் பெங்கால் அணி – பட்னா அணியையும், ஜெய்ப்பூர் அணி – உத்தரப்பிரதேச அணியையும் எதிர்கொள்கின்றன.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 33-26 என்ற புள்ளிக் கணக்கில் தெலுகு அணியையும், ஹரியானா 53-26 என்ற புள்ளிக் கணக்கில் உத்தரப்பிரதேச அணியையும் வென்றன.

பட்னா – பெங்களூரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 32-32 என்ற புள்ளிக் கணக்கில் டிரா ஆனது.

------------

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் ராஜஸ்தான் மாநிலத்தில் அடுத்த மாதம் 24ஆம் தேதி முதல் நடைபெற உள்ளது.

ஜெய்ப்பூர், அஜ்மீர், உதய்பூர், ஜோத்பூர், கோட்டா உள்ளிட்ட 7 நகரங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

12 நாட்கள் நடைபெற இந்தப் போட்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்க உள்ளனர்.

----------------

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

Obense-யில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் லக்ஷயா சென் 21-13, 21-14 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் Anders Antonsen-ஐ வீழ்த்தினார்.

இன்று மாலை நடைபெற காலிறுதியில் லக்ஷயா சென் - ஃபிரான்சின் Alex Lanier-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - ரங்கி ரெட்டி இணை 21-19, 21-17 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் Yang - Po - Han – Liu Kwang இணையை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

இன்று மாலை நடைபெற உள்ள காலிறுதியில் இந்திய இணை - இந்தோனேஷியானவின் முகமது ரியான் – ரஹமத் ஹிதாயத் இணையை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>